**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் – 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்கும் திட்டம் – 2014–15 ஆம் நிதியாண்டிற்கான திட்டத் தொடராணை மற்றும் ரூ.27,82,000/– செலவினத்தை 2015–16 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண்.33** **நாள் 12.06.2015**

**மன்மத–வைகாசி 32, திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.62, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 01.07.2013.
2. அரசாணை (1டி) எண்.13, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 22.11.2013.
3. அரசாணை (நிலை) எண்.45, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 13.08.2014.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3132/சிபதி/2014, நாள் 15.07.2014 மற்றும் 08.12.2014.

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற, செவித்திறன் குறைபாடுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ், 2013–2014 ஆம் நிதியாண்டிற்கு திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.3,20,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டுள்ளது. இதில், காதுகேளாதோர் பள்ளி மாணவர்களுக்கென வழங்கப்பட்ட தொகை ரூ.1,60,000/– ஆகும்.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், இத்திட்டத்தின் கீழ், 2013, மார்ச் / ஏப்ரலில் நடைபெற்ற பொதுத் தேர்வில் 10 ஆம் வகுப்பில் மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்த மற்றொரு செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவிக்கு பரிசுத் தொகை வழங்க ரூ.20,000/–மும் மற்றும் 12 ஆம் வகுப்பில் மாநில அளவில் மூன்றாம் இடம் பிடித்த மற்றொரு செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவிக்கான பரிசுத் தொகை ரூ.20,000/–மும் ஆக மொத்தம் ரூ.40,000/–, 2013–2014 ஆம் ஆண்டிற்கு, கூடுதல் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.25,17,500/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[த.பி.பா]

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் சிறப்புப் பள்ளிகளில், அரசு பொதுத் தேர்வில் தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு மாவட்ட அளவில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்க, 2014–15 ஆம் நிதியாண்டிற்கு, ரூ.27,82,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று, மார்ச்/ஏப்ரல் 2014ல் நடைபெற்ற அரசு பொதுத் தேர்வில் தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு மாவட்ட அளவில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், 2014–15 ஆம் நிதியாண்டு முடிவடைந்துள்ள நிலையில் 2015–16 ஆம் நிதியாண்டில் ரூ.27,82,000/– (ரூபாய் இருபத்தேழு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரம் மட்டும்) இவ்வாணையின் இணைப்பில் உள்ளவாறு இச்செலவினத்தை மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூகநலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AR-காது கேளாதோர் பள்ளிகள் – 59–பரிசுகளும், வெகுமதிகளும் (த.தொ.கு.2235–02–101–AR-5900).**

7. இவ்வரசாணை, நிதித் துறையின் இசைவுடன் அலுவல் சார்பற்ற எண்.31935/நிதி(சந)/2015, நாள் 08.06.2015–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மூலமாக)
<u>நகல்</u>
பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந.) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–1
## 2014–15 ஆம் நிதியாண்டு

**10 ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ/மாணவிகள் ரொக்கப் பரிசு, பாடப்புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்க விவரப் பட்டியல்**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | 1ம் இடம் ரூ. | 2ம் இடம் ரூ. | 3ம் இடம் ரூ. | மொத்தம் ரூ. | பாடப்புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் சேர்த்து நபர் ஒருவருக்கு ரூ.11,000/– ரூ. | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 2. | திருநெல்வேலி | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 3. | இராமநாதபுரம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 4. | சிவகங்கை | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 5. | விருதுநகர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 6. | தேனி | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 7. | மதுரை | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 8. | திண்டுக்கல் | 2 | 6000 | 4500 | – | 10500 | 22000 | 32500 |
| 9. | நீலகிரி | 2 | 6000 | 4500 | – | 10500 | 22000 | 32500 |
| 10. | திருப்பூர் | 2 | 6000 | 4500 | – | 10500 | 22000 | 32500 |
| 11. | கோயம்பத்தூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 12. | ஈரோடு | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 13. | சேலம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 14. | நாமக்கல் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 15. | தர்மபுரி | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 16. | புதுக்கோட்டை | 2 | 6000 | 4500 | – | 10500 | 22000 | 32500 |
| 17. | கரூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 18. | அரியலூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 19. | பெரம்பலூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 20. | திருச்சி | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 21. | நாகப்பட்டினம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 22. | திருவாரூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 23. | தஞ்சாவூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 24. | விழுப்புரம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 25. | கடலூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 26. | திருவண்ணாமலை | 4 | 12000 | 4500 | 3000 | 19500 | 44000 | 63500 |
| 27. | வேலூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 28. | காஞ்சிபுரம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 29. | திருவள்ளூர் | 4 | 6000 | 4500 | 6000 | 16500 | 44000 | 60500 |
| 30. | சென்னை | 5 | 6000 | 13500 | 3000 | 22500 | 55000 | 77500 |
| | **மொத்தம்** | **90** | **186000** | **144000** | **81000** | **411000** | **990000** | **140100** |

பொ.சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–2
## 2014–15 ஆம் நிதியாண்டு

**12 ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ/மாணவிகள் ரொக்கப் பரிசு, பாடப்புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்க விவரப் பட்டியல்**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | 1ம் இடம் ரூ. | 2ம் இடம் ரூ. | 3ம் இடம் ரூ. | மொத்தம் ரூ. | பாடப்புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் சேர்த்து நபர் ஒருவருக்கு ரூ.11,000/– ரூ. | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 2. | திருநெல்வேலி | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 3. | இராமநாதபுரம் | – | – | – | – | – | – | – |
| 4. | சிவகங்கை | – | – | – | – | – | – | – |
| 5. | விருதுநகர் | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 6. | தேனி | – | – | – | – | – | – | – |
| 7. | மதுரை | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 8. | திண்டுக்கல் | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 9. | நீலகிரி | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 10. | திருப்பூர் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 11. | கோயம்பத்தூர் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 12. | ஈரோடு | 2 | 12000 | 7500 | – | 19500 | 26000 | 45500 |
| 13. | சேலம் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 14. | நாமக்கல் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 15. | தர்மபுரி | 2 | 12000 | 7500 | – | 19500 | 26000 | 45500 |
| 16. | புதுக்கோட்டை | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 17. | கரூர் | 2 | 12000 | 7500 | – | 19500 | 26000 | 45500 |
| 18. | அரியலூர் | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 19. | பெரம்பலூர் | 2 | 12000 | 7500 | – | 19500 | 26000 | 45500 |
| 20. | திருச்சி | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 21. | நாகப்பட்டினம் | 4 | 12000 | 15000 | 4500 | 31500 | 52000 | 83500 |
| 22. | திருவாரூர் | 2 | 12000 | 7500 | – | 19500 | 26000 | 45500 |
| 23. | தஞ்சாவூர் | – | – | – | – | – | – | – |
| 24. | விழுப்புரம் | – | – | – | – | – | – | – |
| 25. | கடலூர் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 26. | திருவண்ணாமலை | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 27. | வேலூர் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 28. | காஞ்சிபுரம் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 29. | திருவள்ளூர் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 30. | சென்னை | 4 | 24000 | 7500 | 4500 | 36000 | 52000 | 88000 |
| | **மொத்தம்** | **64** | **342000** | **165000** | **72000** | **549000** | **832000** | **1381000** |

பொ.சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.